திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் புதிதாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமாக இருக்கிறது. ஏற்கெனவே திருச்செந்தூர் வட்டாரத்திலுள்ள குளங்களுக்கு மணிமுத்தார், பாபநாசம் தேக்கங்களிலிருந்து வருகின்ற தண்ணீர் போதுமானதாக இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்குத் தகவல் அனுப்பி இருக்கிறார். மேலும் புதிய கால்வாய் வெட்டுவதானால் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும். பழைய குளங்களுக்குத் தண்ணீர் விட முடியாது. ஆகவே, இதை மனதில் வைத்து, இந்தப் புதிய திட்டத்தை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கால்வாய் வெட்டுகின்ற வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. போதுமான அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது என்று தெரிந்த பின்னால்தான் இந்த வேலை தொடங்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இருப்பினும் தொகுதி அங்கத்தினர் இப்படிச் சொல்வதால் அதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

கோவில்பட்டி வட்டத்தில் புதிய குளம்.

*325 **வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், எப்போதும் வென்றானுக்கு அருகாமையில் புதிதாகக் குளம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) ரூபாய் 18.33 லட்சங்கள்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இதனுடைய தொடக்க வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த ஆண்டு ஒப்புதலுக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

1974 மார்ச் 7]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த எப்போதும் வென்றானுக்கு அருகாமையில் குளம் அமைக்கும் திட்டத்திற்கு எப்போது மதிப்பீடு போடப்பட்டது? இதுவரை வெல்லாமைக்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் எப்போதும் வென்றான் இந்த ஆண்டு வென்றுவிடுவான் என்று நம்புகிறேன்.

Production of gingelly oil

* 326 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to undertake a package programme for the production of gingelly oil; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, (அ) & (இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கையில் எள்ளும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, நல்லெண்ணய் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. இது ஒரு 'எசன்ஷியல் கமாடிட்டி' ஆக உபயோகப்படக் கூடியது. ஆகவே, இதன் உற்பத்தியை அதிகரிக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே, 'பாக்கேஜ் ஸ்கீம்' தயாரித்து இதன் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, 'பாக்கேஜ் ஸ்கீமில்' சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதினோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in the entire State of Tamil Nadu the best gingelly is grown in the Dharmapuri district especially in Hosur and Denkanikottah taluks. It is grown in about 50,000 acres and its oil-content is very rich and the cake is superior. If the package programme is introduced there, its